### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

அமைப்பாளர் : **க. அறிவுச்செல்வன்**, 3, அக்ரஹாரம், திருவேள்விக்குடி குத்தாலம், மயிலாடுதுறை - 609801

துணை அமைப்பாளர்கள் : மா. ரஜினி, ஆர்.ஹெச்.வி. பாரடைஸ் - 2, முருகன் நகர், பனந்தோப்பு தெரு, சித்தர்காடு, மயிலாடுதுறை. ஜே. கே. செந்தில்குமார், 8ஏ, பனங்காட்டுத் தெரு, சீர்காழி. வீ. கலைச்செல்வன். 37/21,ராஜம்மாள் தெரு, பொறையார் - 609307. ரா. மனோவா சாம்சன். 32, கக்கன் தெரு, பொன்னி நகர், சீனிவாசபுரம், மயிலாடுதுறை கோ. ஜீவானந்தம், வுக்காரமாரி கீழத்தெரு, 3. முடிகொண்டநல்லூர், மணல்மேடு - 609202.

**சென்னை மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர் : **ராஜராஜன்**, 67/32. மேயர் சிட்டிபாபு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

துணை அமைப்பாளர் : ஹாக்கி எம்.எஸ். சதீஷ், 9/6, கிராம முதல் தெரு, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை- 34 ஆர். உதயகுமார், எஃப் 1, முதல் தளம், பதமினி அபார்ட்மெண்ட்ஸ், 2, இராஜாஜி 2வது தெரு, புஷ்பா நகர் மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034. . கே. குமரவேல் , ஜி - பிளாக், எண்.100, பாரதிதாசன், 2வது குறுக்குத் தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை - 600106. . கே. கமல், 19/448A, 24வது குறுக்குத் தெரு, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம் , சென்னை 600106 ஆர். வினோத் கண்ணன். 28/21, ஆர்.ஓ.பி. 5வது தெரு, ஆல் தோட்டம், இராயப்பேட்டை, சென்னை-600014 அன்பு செழியன். 90, பழனியம்மன் கோயில் தெற்கு, 2வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-05 வி.எஸ். சுவாஸ்கர், 202 'டி' பிளாக், சுகந்திரா நகர், ஆயிரம் விளக்கு, சென்னை-600006 அ. ஷிபா தானு, 26, போகம் சாகிப் 3வது தெரு, மக்கீஸ் கார்டன், ஆயிரம் விளக்கு, சென்னை - 06 எம். இருதயராஜ். 179, ஒய்- பிளாக், 6வது தெரு, அண்ணாநகர், சென்னை - 600040. ஜோஷுவா கிளைமெண்ட்ஸ், 13/23, பிரான்சன் கார்டன் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. பா. ராஜீவ்குமார், 102, சி.என்.கே.சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005.

**சென்னை தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் : **வேளச்சேரி வே. ஆனந்தம்**, 202. வி.ஜி.பி. செல்வா நகர், 4வது முதன்மை சாலை விரிவு, வேளச்சேரி, சென்னை - 600042. துணை அமைப்பாளர் : கே. பிரபு, 18/20, அண்ணா நகர்

, சைதாப்பேட்டை, சென்னை - 600015. மோ. எழில், 35/37, நெடுஞ்செழியன் தெரு, நேருநகர், வேளச்சேரி, சென்னை - 600042. இரா. பாஸ்கரன் , 3. சரோஜினி பாய் தெரு, சாலிகிராமம், சென்னை - 600093. ஆர். ஆனந்த், 544, 16வது தெரு, 4வது செக்டார், கலைஞர் நகர், சென்னை 600078. ஏ.ஜி.வேலன், 20/4, வைலட் அப்பார்ட்மெண்ட், முகப்பேர் மேற்கு, சென்னை - 37 கே. சரவணன். 2. முரளி கிருஷ்ணா முதல் தெரு, வளசரவாக்கம். சென்னை - 600037. செ. சதீஷ், 11/7, 4வது தெரு, தாமோதரபுரம், அடையாறு, சென்னை - 20. டி. எச்கியேல், 76, காமராஜர் தெரு, அண்ணாநகர், தரமணி, சென்னை - 600113. எஸ். கார்த்திக், 20, பெருமாள் நகர் மெயின்ரோடு, உள்ளகரம், சென்னை - 600091. சி. செந்தில்குமார், 4/564, பாரதியார் நகர், நீலாங்கரை, சென்னை - 600115. ஜி. சதீஷ்குமார், 18, பொன்னியம்மன் கோயில் தெரு, சோழிங்கநல்லூர், சென்னை - 600119. எஸ். நவீன்குமார், 2/90, அண்ணா தெரு, மேட்டுக்குப்பம், வானகரம், சென்னை - 600116 எஸ். சுரேஷ் பிரபாகரன், 3/192, லோகநாதன் தெரு, நன்மங்கலம், சென்னை - 600129. எஸ். ஏ. மோகன் குமார், 555/8, 2வது மாடி, பேர்ன்பேட்டை, 2வது தெரு, நந்தனம் , சென்னை-35 இர. தமிழன்பன். 33/2, திருவள்ளுவர் தெரு, எத்திராஜ் நகர், மேற்கு மாம்பலம், சென்னை - 33. வெ. கிஷோர் குமார், 13, கவரை தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை-600015 ச. ஜெயராம், 21/17, மாந்தோப்பு 2வது தெரு, மடுவின்கரை, கிண்டி, சென்னை - 600032.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் : **ஆர். பார்த்தசாரதி**, ரெட்டியார்பட்டி, கன்னிவாடி அஞ்சல்.

துணை அமைப்பாளர் : வே. தன்ராஜ், 5/30, மல்லைய கவுண்டன்பட்டி, வடக்கு தாத்தநாயக்கன்பட்டி அஞ்சல், பழனி தாலுகா. ரா. ஜெயக்குமார், 108, பள்ளிவாசல் தெரு, கீழக்கு கோவிந்தபுரம், திண்டுக்கல். எம். வெங்கடேசன் , எஸ். பெருமாள்கோவில்பட்டி, செட்டிநாயக்கன்பட்டி அஞ்சல், திண்டுக்கல். ஜெ. அருண், டி.பண்ணைப்பட்டி அஞ்சல், திண்டுக்கல். சே. முகமது பிலால் , 5/194, ஆனந்தகிரி 2வது தெரு, கொடைக்கானல், திண்டுக்கல். ஏ.சி. அய்யப்பன், எம். ஜி.ஆர். நகர், கே.சி. பட்டி அஞ்சல் கொடைக்கானல் வட்டம். எம். வினோத்குமார், 54, கணபதிபட்டி தெரு, சேடபட்டி, சித்தையன் கோட்டை, ச. ஸ்ரீராம், 4/578, திருமலைக்கேணி நகர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், திண்டுகல்-624004.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் : **தவசி மணிகண்டன்,** 1இ, மேலச்சேவல், சேரன்மாதேவி வட்டம், திருநெல்வேலி-627452.

துணை அமைப்பாளர் : வீ. இஸ்ரேல் பிரபாகரன், 108/3,மெயின்ரோடு,இலங்குளம், பரப்பாடி - 627110, நாங்குநேரி. அனிதா பி. பிரின்ஸ், 8/8, நடுத்தெரு, நல்லம்மாள்புரம், திசையன்விளை தாலுகா, திருநெல்வேலி. ம. சுதர்சன், 16, தங்கம்மாள் கோவில் தெரு, பிராஞ்சேரி, திருநெல்வேலி. வெ. பொன்ராஜ், 99இ/9, பாபநாசம் மெயின்ரோடு, டாணா, விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி. பொன் செல்வன், 71, அம்மன் கோவில் தெரு, எஸ்.என். பள்ளிவாசல், நாங்குநேரி. உ. அருள்ஜெகன், தெற்கு நெருவிளை தெரு, யாக்கோபுரம், பழுவூர். வள்ளியூர் ஒன்றியம்.

**மதுரை மாநகர் மாவட்டம்**

துணை அமைப்பாளர் : த. தெய்வகுமார், 48, தத்தனேரி மெயின் ரோடு, அருள்தாஸ்புரம், மதுரை - 18.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் : ம. கண்ணதாசன். எண்.10, 10வது தெரு, காசி விசாலாட்சிபுரம், எண்ணூர், சென்னை - 57.

**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள்: சி. சந்திரன், 4/3, சுப்பிரமணியர் கோவில் பின்புறம், குழிபிறை (அ), திருமயம் (தா), புதுக்கோட்டை. அ. ஷாஜஹான், 745, செங்குந்தர்புரம், மணமேல்குடி, புதுக்கோட்டை. ர. ராஜபாண்டியன், அன்னை இல்லம், மங்களநாடு மேற்கு சுப்பிரமணியபுரம் அஞ்சல், புதுக்கோட்டை.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் : டி. கண்ணன், 28, ஏ பிளாக், சத்தியவாணி முத்து நகர் செயின்மேரீஸ் சாலை, மந்தவெளி, சென்னை - 28. ச. அசோக்குமார், 18, இராஜா பிள்ளை தோட்டம், மாம்பலம் நெடுஞ்சாலை, தியாகராயர் நகர், சென்னை 17.

**தேனி தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் : எம். சேதுராஜா, 40, வைகை ரோடு, ஆண்டிபட்டி, தேனி. த. சித்திரேசன், 123/33, பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, கம்பம், தேனி - 625516.

**சிவகங்கை மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் : ம. கமல்ராஜ் ப.எண். 10/1, பு.எண்.14, ஜி பிளாக், ஆறுமுகநகர் மேற்கு, காரைக்குடி - 630001 கி. பிரவீன்குமார். சாமியார்பட்டி, கீழகண்டனி அஞ்சல், சிவகங்கை வட்டம். சிவகங்கை.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர் : ப. வீரபாண்டியன் வீரபாண்டிய பவனம், நெ.1, நெல்லை நாயனார் தெரு, பாளையம்கோட்டை, திருநெல்வேலி

**தென்காசி வடக்கு மாவட்டம்**

தென்காசி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட மு. சரவணகுமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கார்த்திக்,** (127 பாரதியார் 2வது சந்து தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்) **தென்காசி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பெரம்பலூர் மாவட்டம்**

பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட முனைவர் செ. சாம்ராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **வெ.கார்மேகம்,** (4/30, மெயின் ரோடு, டி.களத்தூர், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்) அவர்கள் **பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;** மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வெ.கார்மேகம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **முனைவர் செ.சாம்ராஜ்** அவர்கள் **பெரம்பலூர் மாவட்ட துணை அமைப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட இரா.ராஜகுரு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **முகமது ஜகாங்கீர்,** (7/50, பட்சி வளையக்காரத் தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் **இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;** மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முகமது ஜகாங்கீர் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **இரா. ராஜகுரு** அவர்கள் **மாவட்ட துணை அமைப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 03-08-2023

**தயாநிதிமாறன் எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

---

### பரமக்குடி சிறுமி பாலியல் வன்புணர்வு வழக்கு!

# அ.தி.மு.க. கவுன்சிலர் ஜாமீன் ரத்து - உடனே சிறையிலடைக்க வேண்டும்!

**அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ப.நம்பிச்செல்வன் ஆஜரான வழக்கில் - மதுரை உயர்நீதி மன்றம் உத்தரவு!**

மதுரை, ஆக. 6-

பரமக்குடி சிறுமி பாலியல் வன்புணர்வு வழக்கில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பரமக்குடி நகராட்சி 3வது வார்டு கவுன்சிலர் சிகாமணி ஜாமீன் ரத்து செய்ததுடன் உடனடியாக சிறையில் அடைக்க வேண்டும் என அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ப.நம்பிசெல்வன் ஆஜராகி வாதாடியதன் காரணமாக மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் விபரம் வருமாறு:

அ.தி.மு.க.வைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி 3வது வார்டு கவுன்சிலர் சிகாமணி (வயது 44) ரியல் எஸ்டேட் நிறுவனம் நடத்தி வருகிறார். இவரிடம் பரமக்குடியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பணியாற்றி வந்தனர். இவர்கள் இருவரும் 16 வயது மாணவி ஒருவரை அ.தி.மு.க. கவுன்சிலர் சிகாமணியிடம் அறிமுகப்படுத்தினர்.

இதனையடுத்து, அ.தி.மு.க. கவுன்சிலர் சிகாமணி, அதே ஊரைச் சேர்ந்த அவரது நண்பரான மறத்தமிழர் சேனை அமைப்பின் மாநிலத் தலைவர் புதுமலர் பிரபாகரன் (வயது 42) மற்றும் மாதவன் நகரைச் சேர்ந்த ராஜாமுகமது (வயது 36) ஆகியோர் பார்த்திபனூரில் உள்ள ஒரு அறையில் வைத்து அந்த மாணவியை பாலியல் வன்புணர்வு செய்தனர். இந்நிகழ்வு குறித்து அச்சிறுமி தனது பெற்றோரிடம் தெரிவித்ததன் பேரில், பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதுகுறித்து இராமநாதபுரம் மாவட்ட அனைத்து மகளிர் காவல் துறையினர், போக்சோ மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்ட பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து அ.தி.மு.க. கவுன்சிலர் சிகாமணி, பிரபாகரன், ராஜாமுகமது மற்றும் 2 பெண்கள் என ஐந்து பேரையும் கைது செய்தனர். பின்னர், இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது. இதில் மாவட்ட நீதிமன்றம் சிகாமணிக்கு ஜாமீன் வழங்கியது.

மாவட்ட நீதிமன்றம் வழங்கிய ஜாமீனை ரத்து செய்யக் கோரி, சி.பி.சி.ஐ.டி. காவல்துறை ஆய்வாளர் சார்பில் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு நீதியரசர் இளங்கோவன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ப.நம்பிசெல்வன் ஆஜ ராகி, "பாதிக்கப்பட்ட சிறுமி கூட்டு பாலியல் தொந்தரவுக்கு ஆளாகியுள்ளார்.

இதில் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்ட சிகாமணிக்கு ஜாமீன் வழங்குவதற்கு முன்பாக அவர் மீதான குற்றச்சாட்டு களின் தீவிரத் தன்மை மற்றும் அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை கீழமை நீதிமன்றம் கணக்கில் கொள்ளவில்லை. இது உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களுக்கு முரணாக உள்ளது. எனவே, இவரது ஜாமீனை ரத்து செய்ய வேண்டும்" என்று அழுத்தந்திருத்தமாக வாதாடினார்.

விசாரணை முடிவில் "பரமக்குடி அ.தி.மு.க. கவுன்சிலர் சிகாமணிக்கு வழங்கிய ஜாமீன் ரத்து செய்யப்படுகிறது. அவரை உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அவர் மீதான வழக்கு விசாரணையை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும்" என்று நீதியரசர் இளங்கோவன் உத்தரவிட்டார்.

---

### கடலூர் மாவட்டத்தில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த

# 2 சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!**

சென்னை, ஆக.6 -

கடலூர் மாவட்டத்தில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், வெள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த சபரிவாசன், த/பெ. சரவணன் (வயது10) மற்றும் யோகேஸ்வரன், த/பெ. கணேஷ் (வயது 8) ஆகிய இரண்டு சிறுவர்களும் 3.8.2023 அன்று மதியம் கொள்ளிடம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### தஞ்சை மாவட்டத்தில் வாகனத் தணிக்கையில் வாகனம் மோதி

# உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதி!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!**

சென்னை, ஆக. 6-

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாகன தணிக்கையின் போது இரு சக்கர வாகனம் மோதி உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், மெலட்டூர் காவல் நிலைய தலைமைக் காவலர், பழனிவேல் (வயது 38) 3.8.2023 அன்று உதவி ஆய்வாளர் தலைமையில், குருங்களூர் வெண்ணாற்றுப் பாலம் அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர் மீது கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனம் மோதியதில் காயமுற்று சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இரவென்றும் பகலென்றும் பாராமல், தம் குடும்பத்தினரையும் மறந்து, நம் காவல் துறையினர் கடமையாற்றி வருகின்றனர். அந்தவகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வந்த தலைமைக் காவலர் பழனிவேல் அவர்களின் அகால மரணம் காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

உயிரிழந்த தலைமைக் காவலர் பழனிவேல் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு, இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### உதகையில் நாளை மாவட்ட தி.மு.க. அலுவலக முகப்பில் உள்ள

# கலைஞர் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி!

**மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!**



உதகை, ஆக.6-

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்திய அரசியலில் மூத்த தலைவராக இருந்து பல்வேறு சூழ்நிலைகளில் பல குடியரசு தலைவர்கள் மற்றும் பிரதமர்களையும் உருவாக்கியவர். இந்திய அரசியலில் சமூக நீதியை காப்பதில் முதன்மையாக திகழ்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தவர்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை திகழவைக்கும் முதல்வர் தளபதி அவர்களை நமக்கு தந்தவர்.

ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக இருந்ததோடு, தொடர்ந்து இந்திய அரசியல் வரலாற்றில் 13 முறை சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிக்கண்டு ஒவ்வொரு கழகத் தொண்டனுக்கும் பெருமை சேர்த்து, தமிழகம் அனைத்து துறைகளிலும் இன்றும் சிறப்பு பெற்றிட அடித்தளமாக திகழ்ந்தவர்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் தன் கண் இமை மூடும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அய்யா அவர்களின் நினைவுநாளில் புகழுஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்படி, கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அய்யா அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்தும் மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

அதன்படி, நாளை (திங்கட்கிழமை) காலை 11.30 மணியளவில், மாவட்டக் கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் கலைஞர் அய்யா அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மரியாதையை செலுத்திட வேண்டுவதோடு, அனைத்து பகுதிகளிலும் ஆதரவற்ற முதியோர் இல்லங்களுக்கு உணவு, பழங்கள், கம்பளி போர்வைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தியும், தலைவர் கலைஞரின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளைக் கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட வேண்டுகிறேன்.

---

### தி.மு.க. மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கான நேர்காணல்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமிப்பதற்கான விண்ணப்பப் படிவம் ஏற்கனவே முரசொலியில் வெளியிடப்பட்டு, மாவட்டக் கழக செயலாளர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. அதனை வரும் ஆகஸ்ட் 10-ம் தேதிக்குள் ஒப்படைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மனுக்கள் பெறப்பட்டதன் அடிப்படையில், மாநில நிர்வாகிகள் நேர்காணல் நடத்திட ஏதுவாக கீழ்க்காணும் பட்டியல் அறிவிக்கப்படுகிறது. மாநில நிர்வாகிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் செயலாளர்களுடன் கலந்துப் பேசி நேர்காணல் நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இரா. ராஜீவ்காந்தி – பி.எம். ஆனந்த்**

விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், பெரம்பலூர், அரியலூர்.

**சி. ஜெரால்டு – ஜெ. வீரமணி**

திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு.

**எஸ். மோகன் – கா. பொன்ராஜ்**

கரூர், சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, நீலகிரி.

**மன்னை த. சோழராஜன் – பூர்ணசங்கீதா சின்னமுத்து**

சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, இராணிப்பேட்டை, வேலூர்.

**ரா. தமிழரசன் – கா. அமுதரசன்**

திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு.

**அதலை பி.செந்தில்குமார் – வி.ஜி. கோகுல்**

இராமநாதபுரம், விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 04-08-2023

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

---



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாலங்காடு ஒன்றியம் தும்பிகுளம் கிராமத்தில் தமிழக அரசின் கால்நடை சிறப்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து கால்நடைகளில் வளர்ச்சி பராமரிப்பு உள்ளிட்ட வகைகளை பார்வையிட்டார். உடன் கால்நடை பராமரிப்புத்துறை கோட்டை உதவி இயக்குனர் டாக்டர் தாமோதரன், ஒன்றிய கழகச் செயலாளர்கூளுர் எம்.ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் விஜயகுமாரி சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலா கோபி, உள்பட அரசு அதிகாரிகள், கால்நடைத்துறை மருத்துவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் உள்ளனர்.